# வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி?

வேதாத்திரியப் பார்வையில் 100 டிப்ஸ்

பானுகுமார் படைப்புலகம்



**www.banukumar.in**

# வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி?

## (வேதாத்திரியப் பார்வையில் 100 டிப்ஸ்)


## அருள்நிதி

## மன்னார்குடி பானுகுமார்


# என்னுரை

- உங்களுடைய சிந்தனைகைளையும் உணர்ச்சிகளையும் மனதையும்  கட்டுப்படுத்துவது எப்படி?
- உங்களிடம் உள்ள அறுகுணங்களை சீரமைப்பது எப்படி?
- முடியும் என்கிற மன நிலையுடன் சாத்தியமான விஷயங்களைப் பற்றி சிந்திக்கும் தன்மையை அடைவது எப்படி?
- உங்களது உடலையும் உயிரையும் ஆரோக்கியமாக பாதுகாப்பது எப்படி?
- உங்களது உறவுகளிடமும், நண்பர்களிடம் எதிரிகளிடமும் ஆரோக்கியமான உறவை மேம்படுத்துவது எப்படி?
- துடிப்புள்ள மனிதராக விளங்க உங்களுடைய நடவடிக்கைகளை மாற்றி அமைத்துக் கொள்ளுவது எப்படி?
- உள்ளுணர்வில் உதிக்கும் நேரான எண்ணங்களை உங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ளுவது எப்படி?
- உங்களைப் பற்றிய உங்கள் மதிப்பிட்டை (தற்சோதனை) வளர்த்துக் கொள்ளுவதன் மூலம் உங்களது செயற்பாடுகளை அதிகரித்து கொள்ளுவது எப்படி?
- உங்களது ஆழ் மனதின் சிந்தனைகளை ஆக்கப் பூர்வமான செயற்பாடுகளாக உபயோகப்படுத்திக் கொள்ளுவது எப்படி?

- நீங்கள் எப்படிப்பட்ட மனிதராக இருக்க விரும்புகிறீர்களோ அப்படி மாறுவது எப்படி?
- உங்களது எதிர்காலம் நெருக்கடிகள் அற்றதாக விளங்கும்படி சிந்தித்து கற்பனை செய்து வாழ்க்கையை அப்படி உருவாக்கிக் கொள்ளுவது எப்படி?
- மனிதருக்கு மனிதர் என்கிற முறையில் மற்றவர்களுடன் ஒரு வெற்றிகரமான மனிதாபிமான உறவுகளை செயற்படுத்துவது எப்படி?
- இதனைச் செய்கிறேன், அதன் முன்னேற்றமான பலன் இது என்கிற தாக்கத்தை உங்களுக்குள்ளேயே உருவாக்கிக் கொள்ளுவது எப்படி?

சமுதாயத்திற்கு தொண்டாற்றி ஒரு மாமனிதராக உயர்ந்து நிற்பது எப்படி? இந்த கேள்விகளுக்கான விடைதான் "வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி?" என்ற இப்புத்தகம். வேதாத்திரியப் பார்வையில் 100 தகவல்களாக தொகுக்கப்பட்டிருக்கின்றன.

வாழ்க வளமுடன்
வழக்கமான வணக்கங்களுடன்
வேதாத்திரியம் பானுகுமார்

# வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி?

## (வேதாத்திரியப் பார்வையில் 100 டிப்ஸ்)

- "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" ஆம்! பிறவியிலேயே நாம் அனைவரும் மிகச் சிறந்த வெகுமதி இரண்டைப் பெற்றிருக்கிறோம். அதுதான் உடல், உயிர்.
- இந்த உடல், உயிரின் ஆற்றலைக் கொண்டு நம்முடைய மெய்யான தன்மைகளை நம்மால் அளந்தறிய முடிகிறது. நம்முடைய ஆழ்மனதில் தெய்வீகமான ஒரு புத்திசாலித்தனம்

இருக்கிறது. இதனைப் பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றிபெற மனவளக்கலை பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

- உலகில் பிறந்த ஒவ்வொருவரும், மற்றவர் செய்ய முடியாத ஒன்றைச் செய்து முடிக்கும் தனிச்சிறப்பு மிக்க ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். அந்தச் செயல் எது எனக் கண்டு கொள்ளுங்கள். அதை மட்டுமே வளர்த்துக் கொண்டு வந்தால், உங்கள் வழியில் நீங்களும் சாதனைப் படைத்து வெற்றி காண இயலும்.
- வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்களின் குணங்கள் அனைத்தும் உங்களிடமும் இருக்கிறது. இரண்டு கைகளையும், இரண்டு கால்களையும், இரண்டு கண்களையும், அவற்றை செயல்படுத்துகின்ற மூளையினையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இவற்றைப் பயன்படுத்தி, "என்னால் முடியும்" என்கிற நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.
- உங்கள் கால் நகம் கீறிய கோடுகள் வழியே, கங்கையும் சிந்துவும் ஓடி வரும். உங்கள் விழிமுன்னே சூரியன் கூட சினனப் பொறிதான்.



- உங்கள் கட்டை விரலை விட இமயம் குட்டைதான். நீங்கள் நீட்டிப் படுத்தால் உலக உருண்டையில் நீங்கள்தான் பூமத்திய ரேகை. சாதிக்கப் பிறந்த உங்களுக்கு உங்கள் விரல்கள் பத்தும் மூலதனம்.
- ஒரு ஆன்மிக சக்தி அல்லது தெய்வீக சக்தி பெரிய லட்சியங்களை மனிதன் அடைவதற்காக அவனுக்குச் சில

விஷேசமான ஆற்றல்களைக் கொடுத்திருக்கிறது. இதனைப் பயன்படுத்த மனவளக்கலை பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

- வாழ்க்கையில் வெற்றி கொள்ள வேண்டுமானால், ஒரே ஒரு தாரக மந்திரம் – நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையின் ஜன்னல் கதவுகளையும், வாசல் கதவுகளையும் திறந்து வையுங்கள்.
- வாழ்க்கையில் சாதனை படைத்தவர்களையும், வெற்றி பெற்றவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் அனுபவங்களையும், உங்கள் சொந்த விஷயங்களின் உணர்வுகளையும் இணைத்துப் பாருங்கள். நிறையப் புத்தகங்கள் படியுங்கள்.
- ஆயுதங்கள் இல்லாமல் நாம் பிறந்தாலும் நமக்கிருக்கும் ஒரே ஆயுதம் நம்முடைய மூளைதான்". நம்முடைய மூளையைப் பயன்படுத்தி எதையும் நம்மால் சாதிக்க முடியும்.
- நம்முடைய ஆற்றல் எல்லையற்றது. உறங்கிக் கிடக்கின்ற இந்த ஆற்றலை நாம் வெளிப்படுத்தக் கற்றுக் கொள்ள மனவளக்கலை மன்றம் வாருங்கள்.
- உறுதியான குறிக்கோளை உருவாக்கிக் கொண்டு அதை – எழுதி வைத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதெல்லாம் பார்க்க முடியுமோ அப்போ தெல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள். இதைச் செயல்படுத்த, எப்போது, எவ்விதம், என்னென்ன வழிகளில் எந்தக் காலத்திற்குள் அடைய வேண்டும் என்று திட்டமிடுங்கள்.




- சாதனையாளர்களைப் பாருங்கள். உங்களைப் போல் தான் அவர்கள் உணவு சாப்பிட்டார்கள். உங்களைப் போலத்தான் ஆடைகளை அணிந்து கொண்டார்கள். உலகம் அவர்களுடைய துணிச்சலையும் சாதனைகளையும் பாராட்டுகிறது. அவர்கள் ”அனைவருமே வாழ்க்கையை ஆரம்பித்த போது உங்களைப் போலத்தான் இருந்தார்கள்.
- ஒவ்வொரு வெற்றிக்கும் இன்றியமையாத மூன்று அம்சங்கள் என்ன தெரியுமா? தூய்மை, நம்பிக்கை, விடாமுயற்சி. இந்த மூன்றையும் கொண்டு வெற்றியை நோக்கிச் செல்லுங்கள்.
- வெற்றியாளராக விளங்க நீங்கள் விரும்பினால், பழைய வெற்றிப் பாதைகளை விட்டு விலகி, புதிய பாதையில் நடைபோடுங்கள்.
- நினைப்பே நடப்பு. எண்ணமே வாழ்க்கை. எந்த மாதிரியான நடவடிக்கைகள் உங்களுக்கு உடன்பா டா இருக்கிறதோ அதுபோன்ற மனிதராகவே உங்களைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.
- ”விண்ணிலும் மண்ணிலும் வியாபகமான நீங்கள் எண்ணத்தில் நிறைந்திடுங்கள்! செய்கையில் சிறந்திடுங்கள்.




- உங்களிடமும் திறமை இருக்கிறது. நீங்கள் நினைத்தால் அவர்களைப் போல சாதனையாளர்களாக முடியும். நீங்கள் தேர்ந்தேடுக்கும் களத்தில் போராடுகின்ற சக்தி உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் பயன்படுத்துவதற்கு கைகளும் கால்களும் மூளையும் இருக்கிறது. சாதனையாளர்களும் அவற்றைப் பயன்படுத்தித்தான் சாதனை புரிந்தார்கள், நீங்களும் அவற்றைப் பயன்படுத்தி சாதனை புரியலாமே!
- சோற்றைத் தேடி அலைந்து தின்று, சின்னஞ்சிறு கதைகளைப் பேசித் திரிந்தடி, பிறர் வாட பல செயல்களைச் செய்து, வயது கூடி நரைப்பருவம் அடைந்து காற்றுக்கு இரையாகும் வேடிக்கை மனிதர்களைப் போல் வாழ்வது அல்ல மனிதப் பிறவியின் பயன்.

- உங்களுடைய எண்ணங்கள் மீதே உங்கள் எண்ணங்களைக் கொண்டே இப்போதைய வாழ்வு அமைந்துள்ளது. இதை மாற்றி அமைக்கும் சக்தியும் உங்களிடம் உள்ளது. இதற்காக வெளியே எங்கும் அலையாதீர்கள் உங்கள் மனதில் இருந்து மாற்றங்களைத் தொடங்குங்கள். அங்கே தான் அனைத்தும் பிறக்கிறது. மனதை பழக்க மனவளக்கலை பயிற்சி எடுக்கலாமே?




- காந்தியின் எண்ண எழுச்சிதான் சுதந்திரம். தெரசாவின் எண்ண ஆக்கம்தான் தொண்டு. விவேகானந்தரின் எண்ணம்தான் ராமகிருஷ்ண மடங்கள். பன்னிரு சீடர்களின் எண்ணங்கள்தான் கிறிஸ்துவ மதம். வேதாத்திரி மகரிஷியின் எண்ணங்கள்தான் வேதாத்திரியம்.

- எண்ணங்களை மகிழ்வாக, சுகமாக, அன்பாக, பாசமாக, வைத்துக் கொண்டால் செடி, கொடி, மலர்கள், மிருகங்ளோடு ஏன் உயிரற்றவற்றோடு கூட பேசமுடியும்.
- உங்கள் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் குறுகியகால இலக்குகள், நீண்டகால இலக்குகள் என்று ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இந்த இலக்குகளின் அடிப்படையில் மற்றவர்களுடன் கொள்ளுகின்ற உறவினை சிறப்பாக்கி கொண்டால், மகிழ்ச்சிமிக்க மனிதராக நீங்கள் மாறிவிடுவீர்கள்.




- வாழ்க்கை என்பது வாய்ப்புகளின் தொகுப்பு. வெற்றி சிகரத்தைத்தொடுவதற்கு நீங்கள்தான் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். உங்கள் கண் முன் ஆயிரமாயிரம் வாய்ப்புகள் இருக்கின்றன. பயன்படுத்தப்படும் வாய்ப்புகள்தான் பெருகும்.

- எல்லாவித கசப்பு, கோபம், சண்டை, போராட்டம், தவறான பேச்சு, விரோதம் உட்பட அனைத்தையும் உங்களை விட்டு விலக்கி வைத்துவிடுங்கள். வெற்றி உங்களைத் தேடி வரும்.
- ”ஒரு காகிதம், ஒரு பேனா, கொஞ்சம் கற்பனை, இவை மூன்றும் இருந்துவிட்டால் தீர்க்க முடியாத பிச்சினை என்று எதுவும் இருப்பதற்கு வழியில்லை” என்பார் பென்ஞமின் பிராங்களின். இதற்கு அர்த்தம் கொடுப்பது மனவளக்கலையே!.
- வாய்ப்புகளை வசீகரித்துக் கொள்கின்ற திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். வாய்ப்புகளின் வாசல் உங்களுக்கு நிச்சயம் திறக்கும். வாய்ப்பை உங்களால் வசப்படுத்த முடியும்.
- நீங்கள் சாதிக்கப் பிறந்தவர். நொடிப் பொழுதின் உன்னதத்தை உணர்ந்து வாய்ப்பை வசப்படுத்திக் கொள்ளுங்கள். உலகம் உங்கள் கையில். உங்களை நம்பித்தான் உலகமே உருள்கிறது.



- மகத்தான வாய்ப்புகள் எல்லோக்குமே வருகின்றன. ஆனால் அவற்றைச் சாதாரண மனிதர்களால் கண்டுகொள்ள முடிவதில்லை.
- செயலூக்கம் பெற என்ன செய்ய வேண்டும்? ஆக்கப்பூர்வமான சுயவடிவம். வெளி நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆக்கப்பூர்வமான புலன் உணர்வு. ஆக்கப்பூர்வமான கண்ணோட்டம். நடக்கக்கூடும் என்கிற சிந்தனை. ஆக்கப்பூர்வமான உறுதியான நடவடிக்கைகள். ஒருவரோடொருவர் பழகுதலில் வெளிப்படுத்தும் பயனுள்ள திறமை. தனிப்பட்ட ஈடுபாடு. சந்தேகத்திற்கு இடமில்லாத தன்னம்பிக்கை. ஆழ்மனதை படைப்புத் திறனோடு பயன்படுத்துதல். மற்றவர்களுடன் இணக்கமாகச் செயல்படுவதில் வெற்றி பெறவேண்டும் என்கிற ஆசையும் துடிப்பும். இந்த பத்து கோட்பாடுகளைப் பெற மனவளக்கலை மன்றம் வாருங்கள்.



- சோம்பல் சுவடுகளைத் தோளில் சுமக்கவா நீங்கள் பிறந்தீர்கள்? பூமிப்பந்தை புரட்டும் ஆற்றல் கொண்ட நீங்கள் சோம்பலைக் கழற்றி விடுங்கள். கதிரவன் கண்விழிப்பதற்கு முன் விழித்து விடுங்கள். புத்தம் புதிய காலைத் தென்றல் உங்களைத் தழுவ, உங்கள் இன்றையப் பொழுதும் கூடவே மலர்கிறது. மகிழ்வாக எழுந்திருங்கள்.
- நம்மைப் படைத்தவனின் ஆற்றல் நம்மிடமும் இருக்கிறது. ”அவனில்தான் நீ! உன்னில் அவன்! அவன்யார்? நீயார்? பிரிவேது? என்பது வேதாத்திரியம்.
- பிரபஞ்ச மனம் பிரபஞ்ச இரகசியங்களையெல்லாம் சொல்கிறது. நாள் தோறும் தியானம் செய்து பிரபஞ்த்தோடு உறவாடுங்கள். பிரபஞ்ச இரகசியத்தை உணர்ந்த உங்களை உலகில் வெல்ல யாருமில்லை.




- கடினமான சூழ்நிலைகள் நம்மை எதிரநோக்கும் போது நம்முடைய செயல்பாடும் சுறுசுறுப்பானதாகவும் உறுதி நிறைந்ததாகவும் அமைய வேண்டும். நம்மிடமும் நமது

பிறவி ஆற்றலிலும் நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். எதுவும் நடக்கும் என்கிற எண்ணத்துடன் வாழ்க்கைப் பிரச்சினைகளை அணுக வேண்டும். இதற்கு மனவளக்கலையில் ”எண்ணம் ஆராய்தல்” பயிற்சி எடுத்துக் கொள்ளுங்கள்.

- வாழ்க்கை என்றால் உழைத்துக் கொண்டு இருப்பதுதான் என்பதை உணர்ந்து, அதற்கேற்றபடி செயல்பட்டு வருகிறீர்களா? அப்படியானல், உங்கள் பாதம் பட்ட இடமெல்லாம் வெற்றி என்று ரோஜாச் செடிகள் நிச்சயம் முளைக்கும்.
- ”எண்ணம் சொல் செயலால் எவருக்கும் எப்போதும் நன்மையே விளைவிக்க நாட்டமாக இருங்கள்” இது வேதாத்திரியம்
- சாத்தியமானவற்றை சுறுசுறுப்புடன் நாம் சிந்திக்கின்ற போது நம்முடைய ஆழ்மனம் செயல்பட தீர்வுகளை உருவாக்கிக் கொடுக்கிறது. நமது நம்பிக்கை செயல்பாட்டுக்குத் தேவையான சக்தியை அளிக்கிறது. இத்தகைய சக்தியைத் தருவது மனவளக்கலை மன்றங்கள்.
- எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாகத் துன்பம் உங்களைச் செதுக்குகிறதோ, அந்த அளவுக்கு நீங்கள் நிறைந்த இன்பம் பெறுவீர்கள். வெற்றி அடைவீர்கள்.




- இன்றைக்கு நாம் உள்ள நிலை நம்முடைய பழைய எண்ணங்களின், செயல்களின் விளைவே ஆகும். எது நிகழவேண்டும் என்று வீரும்புகிறோமா, அது நிகழ்ந்து விட்டது என்ற நம்பிக்கத்தான். அதை அடைவதற்குரிய எளிமையான வழியாகும். இதற்கு என்ன தேவை? "எண்ணம் ஆராய்தல்" என்ற மனவளக்கலை பயிற்சியே.
- வேலைதான் நம் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் கொடுக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அதுதான் நமக்கு வாழ்க்கையையே கொடுக்கிறது. செய்யும் தொழிலைத் தெய்வமாக மதித்து வெற்றி பெறுங்கள்.
- வெற்றிச் சூழ்நிலையினை அமைப்பது எப்படி? நீங்களாக முயற்சி செய்து மனதை விசாலப்படுத்திக் கொள்ளுங்கள். இதைப் பழக்கப்படுத்திக் கொண்டால் வழக்கப்படுத்திக் கொண்டால் இந்தச் செயல் முறை அனிச்ச செயலாகி, பிறகு

நீங்கள் நினைத்துப் பார்க்காமலே செயல்படத் தொடங்கும். மனதை விசாலப்படுத்த மனதை திறக்க மனவளக்கலை மன்றம் வாருங்கள்.




- உங்கள் ஐம்புலன்களையும் அலைபாயாது ஒரு சில நிமிடம் ஒருமுகப்படுத்தப் பழகிக் கொள்ளுங்கள். எண்ணம், மனம் இரண்டையும் நேர்கோட்டில் கொண்டு வந்து நிறுத்துங்கள். இந்தத் தியானத்தைப் பழகுங்கள். சோம்பல் உங்களைக் கண்டாலே நெருங்காது.
- அமைதியான இடத்தில் அமர்ந்து ஓய்வாக இருங்கள். ஆழ்மனம் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை அடைந்து விடுகிறது. காலையும் மாலையும் இதற்கு உகந்த நேரமாகும்.
- உங்களுடைய உடலில் இரு துருவங்களும் செயலற்றுப் போவதைப் போல கற்பனை செய்து கொள்ளுங்கள். ஓய்வாக இருக்கும்படி உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள். ஓய்வு கிடைக்கும் வரையில் இப்படிச் சொல்லிக் கொண்டே இருங்கள்.

- நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்களோ அதை நிஜமாகவே அடைந்து விட்டதைப் போல நம்புங்கள். இப்படியே திரும்பத் திரும்பச் செய்யுங்கள்.
- ”என்னுடைய பணி வாழ்க்கையின் வெற்றிக்கு, எந்த மாதிரியான வெளிப்புறச் செல்வாக்கும், எப்போதுமே எனக்கு இருந்ததில்லை. என்னிடம் இருந்ததெல்லாம், எனக்குள் இருந்தே அதிகமாகத் தேடிக்கொள்ளும் உள்ளார்ந்த வேட்கை தான்” என்பார் ஏ.பி.ஜே.அப்துல் கலாம்.




- உங்களுடைய ஆசை, நம்பிக்கை, இலக்கு ஆகிய மூன்றும் ஒரு தொடர்ச்சியே என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்கள் ஆழ்மனம் புதிய கருத்துக்களை உங்களுக்கு கொடுக்கும். இலக்கை அடைந்துவிட்ட அனுபவம் உங்களுக்கு ஏற்படும். திருப்தியும் உற்சாகமும் உங்களுக்குத் தோன்றும்.

லட்சியத்தை அடைந்து விட்ட மகிழ்ச்சி பொங்கிப் பிரவகிக்கும். ஒரு நாளைக்கு இரண்டு தடவையாவது இப்படிச் செய்யுங்கள்.

- புத்திசாலிக்கு மட்டுமே வாழ்க்கை திருவிழாவாக அமைகிறது. வாழ்க்கை நமக்கு ஆனந்தத்தை தராது. இடத்தையும், காலத்தையும் தருகிறது. அதை நிரப்பிக் கொள்வது உங்களிடம்தான் உள்ளது.




- விமர்சனங்கள் , தாக்குதல்கள், கண்டனங்கள், பக்குவம் போதாது,. வயது போதாது, பயிற்சி இல்லை, படிப்புக்கூட கிடையாது என்பன போன்ற எத்தனையோ முனகல்கள் வரத்தான் செய்யும். உறுதியும், தன்னம்பிக்கையும் கொண்ட

உங்களைக் கண்டு எல்லாமே ஓடிப்போகும். அவமானம், படுதோல்வி எல்லாமே உறவாகும்.

- எல்லோரும் வெற்றி பெறும் படியாகப் பார்த்துக் கொள்வதுதான் மனித உறவுக் கலையின் ரகசியம் ஆகும். இதன் மூலம் ஒவ்வொருவரின் சுய கௌரவமும் பாதுகாக்கப்படுகிறது அல்லது மேன்மை அடைகிறது.
- புத்திக் கூர்மை, விசேஷமான அறிவு, அனுபவம், திறமை, கடின உழைப்பு ஆகிய அனைத்தும் இருந்தாலும், பயனுள்ள மனித உறவுகள் இல்லாமல் எவரும் வெற்றி பெறுவது சாத்திமில்லை.
- 

- வெற்றி என்பது தோல்வியின் எதிர்நிலை அல்ல. ஓட்டப்பந்தய வீரன், தன் முந்தைய வேகத்தை மீறினால்

போதும். அதுவே வெற்றி. தோற்கிறவர்கள் செய்ய விரும்பாததைச் செய்கிறவர்களே வெற்றியாளர்கள்.

- சுறுசுறுப்பு கடன்களை அடைப்பது மட்டுமல்ல, எதையும் எதிர்பாராமல், கடமையைச் செய்து கொண்டே போகும் அரிய சாதனம்தான் சுறுசுறுப்பு. சுறுசுறுப்புடனும் தன்னம்பிக்கையுடனும் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருந்தால், வெற்றி நிச்சயம் கிடைக்கும்.
- நம்மைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோமோ அந்த அடிப்படையில்தான் நம்மைச் சுற்றியுள்ள உலகமும் நம்மைப் பற்றி நினைக்கிறது. அதோடு மற்ற விஷயங்களைப் பற்றி நம்முடைய எண்ணம் என்ன என்பதையும் வைத்து நம்மைப் பற்றித் தீர்மானிக்கிறது.



- துணிவு என்பது உங்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படையான ஆக்க சக்தி. எதிர்நீச்சல் போட்டு வாழ்க்கையை தொடர துணிவுதான் துணை. ”மனிதனுக்கு வேண்டிய முதலாவது குணம் துணிவுதான். ஏனென்றால் அதுவே மற்ற குணங்களுக்கெல்லாம் உத்தரவாதம் அளிக்கக்கூடியது.
- எதிர்மறைப் பேச்சும் எதிர்மறை எண்ணங்களும் தவறான அப்பிபிராயத்தைத் தோற்றுவிக்கின்றன. உங்கள் முகத்தை கவனிக்குமுன் மக்கள் உங்கள் மனோபாவத்தைத்தான் கவனிக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய மனப்பான்மைக்கு அவர்களேதான் பொறுப்பேற்க வேண்டும்.
- ஒரு செயலை விதைத்து, ஒரு பழக்கத்தை அறுவடை செய்யுங்கள். ஒரு பழக்கத்தை விதைத்து ஒரு பண்பை அறுவடை செய்யுங்கள். ஒரு பண்பை விதைத்து ஒரு தலைவிதியை அறுவடை செய்யுங்கள்.
- பல தொழில் நிபுணர்களும் இன்றைக்கு தங்களுடைய ஆளுமையை வளர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். அதை எப்படிச் செய்வது என்றுதான் அவர்களுக்குத் தெரிவதில்லை




- அன்றாட வாழ்வில் மனதழுத்தங்கள் ஏற்படுவது இயற்கை. இலட்சியப் பயணத்தில் மன ஆழுத்தம் தவிர்க்க முடியாதது. மன அழுத்தம் இல்லாத சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள். மனதுக்கும், உடம்புக்கும் ஏற்புடைய சூழ்நிலையை அமைத்துக் கொள்ளுங்கள். எப்போதும் பதட்டம் வேண்டாம். பதறிய காரியம் சிதறும்.
- மனித உறவுகளில் காரண காரியங்களும் அவர்களுக்குப் புரிவதில்லை. அதனால் அதை வளர்த்துக் கொள்கின்ற திறமையில்லாதவர்களாய் அவர்கள் இருக்கிறார்கள்.
- மனித உறவை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு மற்றவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள அடிப்படையான நான்கு வழிகள் இருக்கின்றன.




- மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டு அவர்கள் உங்களிடம் இனிமையாக நடந்து கொள்வார்கள் என்று நீங்கள் காத்திருக்கலாம். மந்தமான இந்தப் போக்கிற்கு நீங்கள் கொடுக்க வேண்டிய விலை கடுமையானதாக இருக்கும். பிச்சைக்கார மனோபாவத்ததுடன் காத்திருக்க வேண்டியிருக்கும்.
- எதையும் கொடுக்காமல் நீங்கள் விரும்புவதை எடுத்துக் கொள்ள முடியும். இந்த மூர்க்கத்தனமான போக்கு காலப்போக்கில் பலன் தராது.

- கவலையில்லாது சுதந்திரமாக இருக்கக்கூடிய மனம்தான் மேல்நிலையைப் பற்றி சிந்திக்க முடியும். இறைநிலையை அடையவும் முடியும். கவலைகள் நம்மை விட்டு விலகி தானே ஓடுவதில்லை. நாம் அதை விலக்கி வைக்க வேண்டும்.




- உங்களை அறிதல் என்றால் என்ன? உங்களைப் பற்றிய சுயவிமர்சனம். உங்களைப் பற்றி உணர்தல், தன்னம்பிக்கையுடன் உங்களைப் பற்றி சுய பரிசோதனை செய்து கொள்ளுதல். தன்னை அறியும் ஞானம் மனிதனுக்கு மட்டும் தான் உண்டு.
- கவலையை கழற்றிவிட கற்றுக் கொள்ளுங்கள். கழற்றிவிட முடியாதபோது எதிர்நீச்சல் போடுங்கள். உங்களது சவாலை சந்திக்க முடியாமல் கவலை ஓடிப் போய்விடும்.
- வெற்றியின் இரகசியத்தில் முதன்மையானது உங்களை நீங்கள் அறிவதுதான். "உன்னையே நீ அறிவாய்" என்பார் சாக்ரடீஸ்.

- மனித உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேதாத்திரியம் அருமையான பல டிப்ஸ்களை மானுடத்திற்கு வழங்கியிருக்கிறது.
- மற்றவர்கள் சொல்லுவதை திறந்த மனதுடன் கவனமாகக் கெளுங்கள். அவர்களுக்கும் சொல்லுவதற்கு சுவாரஸ்யமான விஷயங்கள் இருக்கும். அவர்கள் சொல்வதற்கு மதிப்பளித்து அதிலிருந்து புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். கேளுங்கள் கொடுக்கப்படும்.
-




- ஆக்கப்பூர்வமான உறுதியுடன் செயல்பட்டு அதையே ஒரு பழக்கமாக வழக்கமாக மாற்றிக் கொள்ளுங்கள்

- வெற்றித் தேவைகளை பகிர்ந்து கொண்டு அன்றாட வாழ்க்கையில் நல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்..
- உறவுகள் மேம்பட என்ன செய்ய வேண்டும்? பேச்சிலும் நடத்தையிலும், பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையற்ற மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து, அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- பிரச்னைகள் ஏற்படும்போது மற்றவர்கள் முதலில் இறங்கி வர வேண்டும் என காத்திருக்காமல் நீங்களே பேச்சை துவக்க முன் வாருங்கள். யாரையும் ஒப்பிடாதீர்கள்.
- எல்லோரிடமும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்பு சொற்களை கூறவும் கூட நேரம் இல்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.




- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்
- அற்ப விஷயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.
- மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். தயக்கத்துடனும் பயத்துடனும் பேசாமலும் இருக்காதீர்கள்.
- மற்றவர் கருத்துகளை, செயல்களை, நிகழ்ச்சிகளையும் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கு கேட்டதை அங்கு சொல்வதையும் அங்கு கேட்டதை இங்கு சொல்வதையும் விடுங்கள். உங்களை நோக்கி அது ஒருநாள் திரும்பும்.




- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதிடாதீர்கள். நீங்கள் முடியவே முடியாது என்று நினைத்ததை உலகில் ஒருவன் செய்து கொண்டிருப்பான்.
- ஒவ்வொரு கட்டத்திலும் உங்கள் நடவடிக்கைகளில் தேவைப்படும் மாற்றங்களைச் செய்து கொள்ளுங்கள். மற்றவர்கள் உங்களிடம் நடந்த கொள்ளும் முறையிலிருந்து இதை அனுமானித்து மாற்றங்களை உண்டாக்கிக் கொள்ள முடியும். இதைக் கடைபித்தால் உங்களைப் பற்றி உங்களுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படும்.
- எவ்வளவுதான் பிரச்சனைகள் வந்தாலும், அவற்றைக் கண்டு ஒரு குண்டூசியின் அளவுகூடச் சோர்ந்து விடாமல், சாமர்த்தியமாகச் சமாளித்து, வெற்றி பெற வேண்டும். அதில்தான் எதிர்பாராத மனநிறைவு இருக்கிறது. அதில்தான் நம்முடைய துணிவையும் நாம் கண்டு கொள்ளலாம்.

- தடுமாற்றம், சினம், கவலை, பேராசை நான்கும் வாழ்க்கைக்கு நன்மை தரும் வழிகளை அடைத்து விடுகின்றன.




- உங்களுக்குத் துண்பங்களைக் கொடுத்து உங்கள் பாவங்களை, பதிவுகளை நீக்க வந்த துணைவன்தான் எதிரி. பகைவன் உங்கள் பதிவை நீக்க வந்த துணைவன். எதிரியை ஏற்றுக் கொள்ளுங்கள். இதுதான் வெற்றியின் சூட்சுமம்.
- உணர்ச்சிகளில் மயங்காமல் வாழும் தெளிவு நிலையே விழிப்பு நிலை ஆகும்.
- ஒரு நல்ல நட்பு என்பது ஆரோக்கியமான வாழ்க்கையை போன்றதாகும். ஒருவரை நண்பனாகப் பெறுவதற்கு முதலில் நீ நல்ல நண்பனாக இரு. நல்லோர் நட்பை நாடிச் சென்று பெறுங்கள்.

- நம்பிக்கை வாழ்வில் உந்து சக்தி. நம்பினோர் கெடுவதில்லை. நம்பிக்கை நம்பிக்கையைப் பெற்றுத்தரும். நம்பிக்கையை நாம் பார்க்க முடியாது. அதற்குக் கிடைத்த பரிசைக் கொண்டுதான் அதை நம்புகஜறோம்.
- வாழ்க்கைப் போரராட்டத்தில் கிடைக்கும் சாந்தியே சத்தியமானது. அது மட்டுமே உண்மையானது.




- பிறர் மகிழ்ச்சிக்காக நாம் மேற்கொள்ளும் எந்த ஒரு முயற்சியும், நம்மையும் மேலே உயர்த்தும். நாளையே மரணம் வருவதாக இருந்தாலும் கூட இன்னும் நூறு ஆண்டுகள் வாழப் போவதைப் போல வாழ்க்கையை நடத்துங்கள். உங்கள் கையைப் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டால், வெற்றி என்னும் ஏணியில் உங்களால் ஏற முடியாது.

- தவறு செய்யப்பட்ட கையோடு புத்தி சொல்லக் கூடாது. குத்திக் காட்டுவது போல அறிவுரை இருக்கக் கூடாது.
- உங்களிடம் இருக்கும் முக்கியமான பொக்கிஷங்களில் நேரமும் ஒன்று. வெற்றியும், தோல்வியும் நீங்கள் நேரத்தை எவ்வாறு கையாளுகிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது. நேரத்தை வெற்றியாக்கும் வித்தை உங்களிடம்தான் உள்ளது. ஒவ்வொரு நொடியும் இனிமையானது.




- நாம் சமுதாயத்தில் ஓர் அங்கம். இந்த உடல் சமுதாயத்தின் சொத்து. அதனை கெடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை.
- உண்ணும் உணவு உடல் மட்டும் பாயும். எண்ணும் எண்ணங்கள் எங்கும் பாயும்.

- அச்சம்தான் ஆபத்துக்களை வரவழைக்கின்றது. அச்சம்தான் ஆபத்துக்களைத் தவிர்க்காமல், ஊரறிந்த கோழைகளாக, அச்சமுடையவர் களை அவமானப்படுத்தி வருகிறது. அச்சம் தவிருங்கள்.
- கணவன் மனைவி இருவரில் யார் அதிகமாக விட்டு கொடுக்கிறாரோ, அவர் தான் அறிவாளி.
- மனம் ஒரு நிரந்தரமான பொருள் இல்லை. தொடர்ந்து வந்து கொண்டே இருக்கக் கூடிய ஒரு இயக்கம் அது.
- எண்ணத்தை ஆராய்ச்சியிலும் தூய்மையிலும் வைத்திருப்பவன் அறிஞன், மகான், ஞானி.




- நீங்கள் விரும்புவதை அடைவது வெற்றி. நீங்கள் அடைந்ததை விரும்புவது மகிழ்ச்சி. வெற்றிபெற வேண்டுமானால், உங்கள் வேலையைக் காதலியுங்கள்.

- பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமல், பொறுத்தலும் மறத்தலும் அமைதிக்கு வழிகளாகும்.
- என் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் பெருமைக்கும் சிறப்புக்கும் உரியவன் என்பதை நம்புகிறேன்.
- என்னுடைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் என்னுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. நான் மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்வது என்பதை என்னால் தீர்மானிக்க முடியும். என்னுடைய எதிர்காலத்தை உருவாக்கவும், இலக்கை அடையவும் அது எனக்குப் போதும்.
- வெற்றியின் மிகக் கடுமையான அம்சம். தொடர்ந்து அதைத் தக்க வைத்துக் கொள்வதே. வெற்றி பெறுவதே எல்லாமுமாய் ஆகிவிடாது. வெற்றி பெறும் விருப்பமும் முக்கியம்.



- நான் வெற்றி பெறுவதற்கான அனைத்துத் திறமைகளும் பிறப்பிலேயே எனக்கு ஆசிர்வதிக்கப் பட்டிருக்கிறது. என்னைச் சுற்றியுள்ளவர்களின் நடவடிக்கைகைளின் மீது என்னுடைய செல்வாக்கைப் பிரயோகிப்பேன். இதன் மூலம் வருங்கால சந்ததிகளுக்கு நான் ஒரு எடுத்துக்காட்டாக அமைவேன்.
- ஏதோ ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக இந்த உலகத்துக்கு நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். மனித இனம் மேலும் சிறப்படைவதற்கு என்னுடைய முழுச் சக்தியினையும் எழுத்தில் பயன்படுத்துவேன்.
- நான் தனித்ன்மை வாய்ந்தவன். என்னைப் போல இந்த உலகத்தில் இன்னொருவன் இல்லை. என் சக்தி வேறு எவருக்கும் இல்லை. நான் தனித்தன்மை வாய்ந்த அமைப்பில் படைக்கப் பட்டிருக்கிறேன். இந்த அமைப்பு இன்னொரு முறை தோன்றுவதற்கு வழியில்லை.




- வந்ததுதான் போகுமேயல்லாது, வருமுன்னே இருந்த ஒன்று போதுண்டோ? இந்த உண்மை எண்ணி எண்ணி உணர்ந்து கொண்டால் எவருக்கும் எப்போதும் நஷ்டமேது?
- சாந்தமாக இருங்கள். எதை வேண்டுமானலும் உங்களால் வசப்படுத்த முடியும். கோபம் விஷம் குடிப்பதற்குச் சமம். "அறியாமையில் தொடங்கும் சினம், வருத்தத்தில் முடிகிறது" என்பார் கிரேக்க ஞானி பிதாகரஸ். கோபம் கொண்டவர்களைத்தான், கோபம் அதிகம் தாக்குகிறது. இத்த கைய கோபம் உங்ளுக்கேன்? அதை தொடக்கத்திலேயே கழற்றி விடுங்கள்.
- மகிழ்ச்சி என்பது உங்களுக்குள் நீங்கள் நினைக்கும் விதத்தில் உள்ளது. சுமாரான அளவுக்கு இருப்பதைக் கொண்டு திருப்தி

அடைபவர் மகிழ்ச்சி நிறைந்தவர். ஏராளமாகக் கொட்டிக் கிடந்தும் திருப்தி அடையாதவர். மகிழ்ச்சி இல்லாதவர்.

- வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமா? வாழ்க்கையில் வசந்தம் வீச வேண்டுமா? மனிதர்களை வசப்படுத்தும் கலையை நீங்கள் அறிந்து இருக்க வேண்டும். அதை நடைமுறையில் கொண்டுவந்து உங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டும்.




- எதையும் முடிக்க வேண்டும் என்று மனதால் முடிவெடுப்பதே வெற்றி பெறுவதற்கு முதல் படியாகும். பின் இடைவிடாத முயற்சி மூலம் நீங்கள் விரும்பியதை அடையலாம். முதலில் வெற்றி இல்லையானால், முயலுங்கள், முயலுங்கள், மேலும் முயலுங்கள்.

- வாழ்க்கையில் நாம் போட வேண்டிய வேஷங்கள் மாறும் போது அதை சவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டும். புதிய வேஷம் நமக்குப் பொருத்தமானதாகவும் இருக்கலாம்.
- சாதாரண வெந்நீரை வெற்றி என்னும் நீராவியாக மாற்றும் வல்லமை விடாமுயற்சிகு உண்டு. பெரிய சாதனைக்கும், சிறிய சாதனைக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், சற்றுக் கூடுதலான முயற்சிதான்.
- ஒவ்வொரு நாளும் நம்மைப் பற்றி நாம் என நினைக்கிறோமோ அதுவதாகத்தான் இருக்கிறோம். எனவே நீங்கள் எப்படி ஆக வேண்டும் என்று விரும்புகிறீர்களோ. அப்படியே ஒவ்வொரு நாளும் உங்களைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்குங்கள்.
- "நேரம் வாய்த்துவிட்ட எண்ணத்தைப் போல சக்தி வாய்ந்தது எதுவும் இல்லை" என்கிறார் விக்டர் ஹியூகோ.
- எண்ணமே ஒரு நாடக மன்றம் போல். எண்ணமே அதில் எண்ணற்ற நடிகர்கள். எண்ணமே அதைப் பார்ப்போர், ரசிப்போராம். எண்ணமே அதன் நிர்வாகி, உடையவன்.
- "ஒரு எண்ணத்துக்கோ இலக்குக்கோ நாம் ஆட்படும் போது கவனத்தையும், முயற்சியினையும் ஒருமுகப்படுத்துவது சுலபமாகிறது.
- கணிப்புச் செய்து துணிச்சலுடன் முயற்சிகளை மேற்கொள்ளும்போது தேவையான துணிச்சலை அது கொடுக்கிறது. தடைகளை வெற்றி கொள்ளவும், தோல்வி பயத்திலிருந்து விடுபடவும் அது உதவுகிறது."
- எல்லோருக்கும் எல்லாமும் அது அதற்கு உண்டான வயதில் கிடைப்பது அரிது! ஒபாமா தனது 55 வது வயதில் அரசியலில் இருந்து ஓய்வு பெறுகிறார்". ஆனால் டொனால்ட் டிரம்ப் தனது 70 வது வயதில் தான் அதிபர் ஆகிறார்.
- பில்கேட்ஸ் தனது 30 களிலேயே உலகின் பெரிய செல்வந்தர் ஆனார். ஆனால் INDITEX SPAIN நிறுவனத்தை தனது 50 ஆவது வயதில் தான் தொடங்கி அமான்சியோ ஓர்டேகா 80 வயதில் தான் உலகின் இரண்டாவது பெரிய செல்வந்தர் ஆனார்.

- ஒருவருக்கு அவர் விரும்பிய வேலை வாய்ப்பு தானாகவே தேடி வருகிறது. இன்னொருவருக்கோ எல்லா திறமைகள் இருந்தும் சரியான வேலையோ அல்லது தொழிலோ அமைவது இல்லை.
- ஒருவர் 22 வயதில் தனது வியாபாரம் தொழிலில் கோடீஸ்வரரான ஒருவர் 45 வயதில் எல்லாம் இழந்து ஏழ்மை ஆகிறார்.
- ஒருவர் 40 வயது வரை தன் தொழில் வியாபாரத்தில் சகல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து 50 வது வயதில் கோடீஸ்வரர் ஆகிறார்.

- எம்ஜியாருக்கு மொத்தம் 70 வயதுவரை வாழ்க்கை வரலாறு. அதில் முதல் 40 வயது வரை வாழ்க்கையில் பயங்கர கஷ்டம். கடைசி 30 வருடங்கள் சாகும்வரை ராஜயோக வாழ்க்கை.
- சர்ச்சில் தனது 82 வது வயதில் History of English Speaking People என்ற புத்தகத்தை எழுதினார்.
- பெர்னாட்ஷா தனது 93 வது வயதில் Pertouched Pepler என்ற நாவலை எழுதினார்.
- டால்ஸ்டாய் தனது 82 வது வயதில் I Cannot Be Silent என்றார்.
- வில்லியம் ஷேக்ஸ்பியர் தனது 50 வது வயதை தாண்டிய பிறகே 37 நாடகங்களை இயற்றினார்...
- எல்லோருக்கும் எல்லாமும் அது அதற்கு உண்டான வயதில் கிடைப்பது அரிது.
- எனவே உங்களுக்கு ஒன்று கிடைத்து விட்டால் அது கிடைக்காமல் போராடும் மற்றவரை ஏளனம் செய்யாதீர்கள்.
- உங்களை மற்றவரோடு சதா ஒப்பிட்டு உங்களிடம் இல்லாததை நினைத்து புலம்பாதீர்கள்.
- யார் கண்டது, அடுத்த நொடி நமக்கு என்ன நடக்கும் என்று, இந்த உலகமே ஒரு பெரிய விபத்தால் உருவானது தான்.
- எனவே எதிர்காலத்தில் நடக்க விருப்பதை எல்லாம் கட்டுப்படுத்த நினைப்பது முட்டாள்தனம்.

- இங்கே இப்போது இந்த நொடியில்  என்ன செய்து கொண்டு இருக்கிறீர்களோ  அதை முழுமையாக விழிப்புணர்வுடன் செய்யுங்கள்.
- அடுத்த நொடி நிச்சயம் அழகாய் மலரும். தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்து கொள்ள முடியும். ஆனால் ஆசைகள் ஓட்டை குடம் போல எப்போதும் நிறைவு செய்ய முடியாது. இது தான் வாழ்க்கை. இதைப் புரிந்து கொண்டவர்கள் மட்டுமே மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்!...
- நீங்கள் பணி புரியும் இடத்தில் வெற்றிபெற முதல் நிலை, அனைவரிடமும் அன்பாகப் பேசுதல்.  உங்களிடம் இருக்கும் விருப்பு வெறுப்புகளைக் காட்டாமல் அன்பை விதைத்துப் பல புத்தம் புது சூழ்நிலையைக் காணலாம்.  இந்த உலகம் இயங்கிக் கொண்டிருப்பதே அன்பானவர்களின் பண்பினால்தான்.
- வெறுப்பு. இதே உலகிலுள்ள வெறுப்புகளினால் நீக்கப்படுவதில்லை.  அன்பின் மூலமாக மட்டுமே அவை நீங்குகின்றன.  இது ஒரு புராதனமான சட்டமாகும். அன்புதான் கடவுள்.  அன்புதான் உண்மை.  அன்புள்ள இடத்தில்தான் இறைவன் இருக்கிறார்.
- உங்கள் விதிக்கு நீங்கள்தான எஜமானர் என்கிற விதத்தில் உங்களுடைய கட்டமைப்பு அமைந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அதன் வெகுமதிகள் என்னவென்றும் நீங்கள் அறிவீர்கள்.
- எங்கே ஆரம்பிப்பது என்று உங்களுக்குத் தெரியும்.  புரியும். செயலூக்கத்தில் உற்சாகத்துடன் பயன்படுத்துங்கள்.
- உங்கள் சுதந்திரத்தை நீங்களே பிரகடனம் செய்து. நீங்கள் விரும்புவதை நீங்களே உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- ஒன்றை இழக்கும்  போது நீங்கள் பெறுகின்ற மனோபாவம் தான், அதை எவ்வளவு காலத்துக்குள் நீங்கள் திரும்பப்பெற முடியும் என்பதை நிர்ணயிக்கிறது
- உங்கள் மீதும் உங்களைச் சார்ந்தவர்கள் மீதும், எவ்வித பலனும் எதிர்பாராமல் எவ்விதக் கட்டுப்பாடும் நிபந்தனைகளும் இல்லாத புனிதமான அன்பைச் செலுத்துங்கள்.  பிறகு

உங்களைச் சுற்றி உற்சாக அலை வீசிக் கொண்டிருக்கும். இது உங்கள் முயற்சியையும் ஆற்றலையும் அதிகரிக்கச் செய்யும். அன்பே வெற்றியின் திறவுகோல்.

- உங்களைச் சார்ந்தவர்களை, பாராட்டக் கற்றுக் கொள்ளுங்கள். பாராட்டு பெறுவதும் இனிமையான அனுபவம். ஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்தவுடன் அது எல்லோர் மனதிலும் பசுமையாக இருக்கும்போதே பாராட்டி விடுங்கள். பாராட்டு உண்மையாக இருக்க வேண்டும்.
- வருகின்ற சந்தர்ப்பத்துக்கு விட்டு விட்டால் உற்சாகம் அடையும் சூழ்நிலை உங்கள் வாழ்நாள் பூராவும் ஏற்படாமல் போய்விடக் கூடும். நிஜ வாழ்க்கை அனுபவங்கள் போலவே பயனுள்ள வெற்றி அனுபவங்களைச் செயற்கையாக ஏற்படுத்திக் கொண்டு, உங்கள் ஆழ்மனதில் நீங்கள் திட்டமிட முடியும்.
- உடல் நலமே முதல் நலம். Health is wealth. இந்த உடம்பினைக் கொண்டுதான் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும். எனவே நாள்தோறும் உடற்பயிற்சி அவசியம் வேண்டும். உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்பார் திருமூலர். ஊரேங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்களில் உடலுக்கு உடற்பயிற்சியும், உயிருக்கு காயகல்ப பயிற்சியும், மனதுக்கு தியானப் பயிற்சியும் சொல்லித் தருகிறார்கள். பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- நிஜம் என்கிற எதுவும் இல்லை. நான் ஒன்றை எப்படிப் பார்க்கிறேனோ அது மட்டுமே நிஜம். எனக்கு மகிழ்ச்சியளிக்கும் விதத்திலேயே வாழ்க்கைச் சம்பவங்களை எப்படி விமர்சிப்பது என்பதை நானே தேர்ந்தேடுத்துக் கொள்வேன். இதன் மூலம் சக்தி வாய்ந்த ஆளுமையை உருவாக்கி கொள்ள முடியும்.
- என்னைப் பற்றியும் என்னைச் சுற்றியுள்ள விஷயங்கள் பற்றியும் நான் கொள்ளுகின்ற பார்வை திறந்த மனதுடனேயே இருக்கும். இதன் மூலம் என்னுடைய உணர்ச்சிகளையும் மனோபாவத்தையும் என்னுடைய கட்டுப்பாட்டுக்குள் நான்

வைத்திருக்க முடியும். இது தன்னம்பிக்கையையும், உற்சாகத்தினையும் எனக்குப் பெற்றுத் தரும்.

- உணர்ச்சிகளையும் மனோபாவத்தையும் என்னுடைய கட்டுப்பாட்டுக்குள் நான் கொண்டு வருகின்ற பொழுது, என்னையும் என்னுடைய சூழ்நிலைகளையும் என்னுடைய கட்டுப்பாட்டில் என்னால் வைத்திருக்க முடிகிறது.. என்னுடைய ஆக்கபூர்வ சக்தியே வாழக்கையின் உயர்நிலைக்கு செலுத்தி வெற்றி பெற முடிகிறது. ஆழ்மனம் எனக்கு வழி காட்டுகிறது. என் உள்ளத்திலிருந்து எழும் குரல், வெற்றி, மகிழ்ச்சியை நோக்கி என்னை அழைத்துச் செல்கிறது. அதற்கு நான் தகுதியானவனாக இருக்கிறேன் என்ற சிந்தனையில் வாழுங்கள்.
- மகிழ்ச்சியும் வெற்றியும் செயல்பாடுகளே. அவையே லட்சியமாகி விட முடியாது. வெற்றிக்கு மகிழ்ச்சிக்கு நீங்கள் உரியவர் தான் என்று எண்ணினால் உங்கள் உள் மனக்குரல் அவற்றை நோக்கி உங்களை அழைத்துச் செல்லும்.
- எப்போதும் மகிழ்ச்சியாகவே இருங்கள். நிகழ்காலத்தை அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் போது தான் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இன்று மகிழ்ச்சியாக இல்லாமல் நாளை மகிழ்ச்சியாக இருப்போம் என எண்ணுவது வெறும் கற்பனை. அப்படி எண்ணும் போது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்வது ஆகும்.
- தோல்வி என்பதும் ஒரு மனோபாவம் தான். தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். தொடர்ந்து முயற்சியில் ஈடுபடுங்கள். தோல்வியை நீங்கள் ஒப்புக் கொள்ளும் போதுதான் அது தோல்வி என்கிற நிஜ வடிவத்தைப் பெறுகிறது.
- ஆக்கப்பூவமான கற்பனையும், நம்பிக்கையும் மனித ஆற்றல்களிலேயே மிகவும் சக்தி வாய்ந்தவை. அது நம் எல்லோரிடமும் இருக்கிறது. நம்பிக்கையினை "வாழ்க்கையினை இயக்கும் சக்தி" என்று வர்ணிக்கிறார் டால்ஸ்டாய்.

- ஐந்து புலன்களையும் அடக்கி புருவத்திடையே அறிவினது மூலத்தை ஆழ்ந்து நோக்கி அமர, சிந்தை அடங்கிடும். சீவனே சிவனாகும். சிறுகச் சிறுகப் பயின்றால் சித்திக்கும் உண்மை நெறி.
- கொழுந்து விட்டெரியும் நம்பிக்கையும், அனைத்தையும் வெல்லக்கூடிய பேரன்பும். சர்வ சக்தி வாய்ந்த தூய்மையும் கொண்டிருந்தால், வெற்றி விரைவில் கிடைக்கும்.




- தன்முனைப்புக்கு இடம் இல்லாத இடம் ஆன்மீகத்துறையும், பொதுநலத் தொண்டுமே ஆகும். இறைவனே நான் ஆக இருக்கிறேன் என்ற உண்மையைத் தெளிவாக உணர்ந்த நிலையில் தன்முனைப்பு எழவே எழாது.
- நமது தவறுகளை, நாமே ஒத்துக் கொள்கின்றபோதே, அந்தத் தவறுகள் நம்மிலிருந்து மறைந்துவிடும். அதற்கு வேண்டுவதெல்லாம் துணிச்சலும் பரந்த மனப்பான்மை

யும்தான். அதற்கு உதவிபுரிவது தவமும், தற்சோதனையும்தான்.

- வெற்றிக்கு நண்பர் பலர். தோல்வி வெற்றியைக் கற்றுக் கொடுக்கிறது. தோல்வியில் வெற்றியைக் கற்றுக் கொள்ளுங்கள். நோக்கத்தின் உறுதியே வெற்றியின் இரகசியம். வெற்றியின் பொருள் விடாமுயற்சி.




- வெற்றி என்பது சிலருக்கு இயற்கையிலேயே விதிக்கப்பட்டிருக்கும். ஆனால் பெரும்பாலானவர்கள் மனம் தளராமல் போராடித்தான் வெற்றியைப் பெறுகிறார்கள். வெற்றி பெறவே நீங்கள் பிறந்துள்ளீர்கள்.
- ஒரு பானையில் நீர் நிரப்பும் அளவிற்கு அதிலிருந்து காற்று குறைந்து விடுவதுபோல் உங்களது நல்ல எண்ணம், நல்ல செயல் உங்களில் நிரம்பும் அளவிற்கு, உங்களது தீயவினைகள் உங்களை விட்டு அகலும். அந்த அளவு தெய்வீக ஆற்றல்

உங்களில் மலரும். இந்த மேலான நலத்தை தவமும் அறமும்தான் அளிக்கும்.

- உடல் எடுக்கப்பட்டதன் நோக்கம் அறிந்து, அறிவை உயர்த்தி பரம்பொருளோடு இணைதல் வேண்டும். எனவே நாம் தொடரும் வாழ்வுப் பயணத்திற்கு வசதியும் பொருத்தமும் உள்ள ஊர்தியாக அமைந்துள்ள இந்த உடலைப் பழுதடையாமல் காத்து இயக்கினால்தான் ஆன்மா தனது லட்சிய எல்லையைக் காலத்தோடு அடைய முடியும்.
- "காலத்தின் அருமை மிக உயர்வானது. நேற்றைய பொழுது திரும்ப வராது. நாளைய பொழுது எப்படி இருக்கும் என்பது நிச்சயமாகத் தெரியாது. ஆனால், இன்றைய இந்தக் காலம் மிக நல்ல காலம் என்பது மட்டும் நன்கு தெரியும். அதை எப்படிப் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் என்று பார்க்க வேண்டும்."
- "எடுத்த காரியங்கள் யாவினும் வெற்றி, எங்கு நோக்கினும் வெற்றி, ஆங்கே விடுத்த வாய் மொழிக்கு எங்கணும் வெற்றி" என்று பாரதியின் பாடலை ஆழ்மனதில் பதிவு செய்யுங்கள்.
- "இந்த நிலை மாறிவிடும்" என்பது மகா வாக்கியம். எந்த நிலையும் மாறும்" என்பது மாறா உண்மை. வாழ்வில் எதுவும் நிரந்தரம் இல்லை. வெற்றி போல் வெற்றி காண்பது வேறில்லை.
- நீங்கள் எந்த வார்த்தையை அடிக்கடி சொல்கிறீர்களோ. அந்த வார்த்தை ஒரு நாள் உங்கள் வாழ்வில் உண்மையாகப் பலித்துவிடும். எனவே, நம்பிக்கையுடன் வெற்றி! வெற்றி!! வெற்றி!!! என்று சொல்லுங்கள்.
- வெற்றிச் சூரியனின் உதயம் தெரிகிறது பாருங்கள். விடியல் வெகுதூரத்தில் இல்லை. விடியலை உருவாக்கும் ஆற்றலும். தன்னம்பிக்கையும் உங்களிடம் உள்ளது.
- ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் மாறிக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு நிமிடமும் உங்களை உருவாக்கி வாழக்கையின் இலக்கை அடையவும், வெற்ற சிகரத்தில் நிற்கவும், உங்கள் எதிர்காலத்தை அமைக்க உங்கள் ஆழ்மனம் ஒத்துழைக்கிறது.

- ஊக்கத்தைத் தூண்டும் உங்கள் நண்பர்கள் யார்?
  தன்னம்பிக்கை, புகழ்ச்சி, பாராட்டு, நன்றி தெரிவித்தல், மரியாதை, அங்கீகாரம் கொடுத்தல், நேர்மறை எண்ணங்கள், சுறுசுறுப்பு, தகுதி, திறமை, விடாமுயற்சி, கடும் உழைப்பு, சமநிலை மனப்பான்மை, சுமூகமாகப் பழகும் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, விவேகமான நடத்தை, பேச்சுத் திறன், எழுத்துத் திறன், சரியான முடிவு எடுத்தல்
  இப்பண்புகளை உடைய உங்களை வெல்ல உலகில் யாருமில்லை.

## துணைநின்ற நூல்கள்


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
2. மாக்ககோலமாய் விளைந்த மதி விருந்து, வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
3. வேதாத்தி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.
4. இணையதள தகவல்கள்.
5. தன்னம்பிக்கை மலர்கள், மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்.


# பானுகுமார் படைப்புலகம்

(171 புத்தகங்கள -31.12.2021 வரை)

PDF www.banukumar.in







## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
4. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
5. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்

18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்
19. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரியமும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.

3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2

3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்

30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## பானுகுமார் படைப்புலகம்

1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் 1 (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் 2 (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் 3 (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் 4. (மானுடம் வென்றதம்மா)



1. Vethathiriam banukum (Youtube channel)
2. Thayumanavar banukumar (Youtube channel)
3. Kumar vadivelu (Youtube channel)




vethathiriam Banukumar

(Youtube channel) Titles

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும் வேதாத்திரியமும்
8. ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்ப ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
31. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33. புத்தக வெளியீடு
34. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2

36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38. வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43 .ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45 ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47. காலமெல்லாம் வேதாத்திரியம்
48. வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49. என்னைச் செதுக்கிய நூல்
50. தினசரி தியானம் சனவரி
51. தினசரி தியானம் பிப்ரவரி
52. தினசரி தியானம் மார்ச்
53. தினசரி தியானம் ஏப்ரல்
54. தினசரி தியானம் மே
55. தினசரி தியானம் ஜூன்
56. தினசரி தியானம் ஜூலை
57. தினசரி தியானம் ஆகஸ்டு
58. தினசரி தியானம் செப்டம்பர்
59. தினசரி தியானம் அக்டோபர்
60. தினசரி தியானம் நவம்பர்
61. தினசரி தியானம் டிசம்பர்
62. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67. தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70. ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3

71. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72. மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76. புலவர் தியாகராஜனார்  பாகம் 1
77. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81. அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82. ஆன்மீகம் ஆன்மீகம்
83. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85. டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86. தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87. சுயமுன்னேற்றம்
88. பத்திரகிரியார் சிந்தனைகள்
89. மன்னார்குடி
90. ஆராய்ச்சி -  நன்மக்கட்பேறு
91. பொதுவானவை
92. மனைவிக்கு மரியாதை
93. திருமூலர் சிந்தனைகள்.
94. ஆண்டாள் சிந்தனைகள்
95. திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96. திருக்குறள் சிந்தனைகள்
97. அப்பர் சிந்தனைகள்
98. பட்டினத்தார் சிந்தனைகள்
99. பட்டினத்தார் ஒப்பாய்வு
100. சிவவாக்கியார் சிந்தனைகள்
101. ஔவையார் சிந்தனைகள்
102. சித்தர்கள் சிந்தனைகள்
103. திருமங்கையாழ்வார்
104. வள்ளலாரின் சிந்தனைகள்
105. பசி என்னும் பாவி

106. பொருள் வறுமையா? அறிவு வறுமையா?

107. Retirement Speech

108. Audio speech part 1

109. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து

110. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து

111. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து

112. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து

113. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து

114. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து

115. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து

116. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து

117. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

118. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்

119. மனவளக்கலையில் வாசி யோகமா?

120. வேதாத்திரியம் மானுட வேதம்

121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி

122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்

123. வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்

124. மனவளக்கலையின் மகத்துவம்

125. அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்

126. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவர் காட்டும் ஆறு பகைவர்கள்

127. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு

128. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாள் கண்ணி பாகம் 1

129. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்

130. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 1

131. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 2

132. முதுமையிலும் உற்சாக வாழ்க்கை பாகம் 3

133. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 2

134. புலவர் தியாகராஜனார் வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள் பாகம் 3

135. தாயுமானவரின் தத்துவங்கள்

136. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள் (வேதாத்திரியம் ஒப்பாய்வு 2)

137. பேரக்குழந்தைகளை மகிழ்வது எப்படி?

138. வேதாத்திரியப் பார்வையில் மனிதனும் மதமும் பாகம் 1

139. திருமந்திரமும் வேதாத்திரியமும்

140. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

141. நானும் என் எழுத்தும்

143. நீங்களும் எழுதலாம் வாங்க

144. புத்தகம் எழுதலாம் வாங்க

145. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க

146. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க

147. நான் ஏன் எழுதுகிறேன்.

148. வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி? (வேதாத்திரியப் பார்வையில் 100 டிப்ஸ்)

149. மானுடம் சிறந்த வாழ்க்கை வாழ வேதாத்திரியத்தின் பத்து கட்டளைகள்

150. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கியத் திறனும் கருத்தியலும்)

151. சிறுகதைகள்


குரு அருள்
வாழ்க வளமுடன்
மிகச் சிறந்த
ஆன்மீக
சொற்பொழிவுகளுக்கு
யூடியூப்
சேனல் பெயர்
YouTube
VETHATHIRIAM BANUKUMAR
Subscribe
கண்டு பேரின்பம் அடைவோம்
சப்ஸ்கிரைப் செய்வோம்
பிறருக்கும் பகிர்வோம்